Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

14 SEP 1971
UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தேசிய தினசரி

மலர் 3
இதழ் 215

சுபகிருது ஆவணி 29 றஜப் 23 செவ்வாய்க்கிழமை (14.9.71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி இரத்தினமஸ்
50. கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# சட்டவிரோத தபால் முத்திரை உறைகள் நடமாட்டம்

## 'தனியாரிடம் வாங்கவேண்டாம்' தபால் அமைச்சு எச்சரிக்கை

கோட்டை, திங்கள் சட்டவிரோத தபால் முத்திரைகள் பொறிக்கப்பட்ட தபாலுறைகள் நடமாடி வருவதாகவும் அதிகாரம் பெறாதவர்களிடம் இவற்றை வாங்கவேண்டாம் என்றும் தபால் அமைச்சு அறிவித்துள்ளது.

தபாலகந்தோர், உப தபாலகந்தோர் போன்ற அதிகாரம் பெற்ற இடங்களில் விற்கப்படும் தபால் உறைகளையே பொதுமக்கள் வாங்கவேண்டுமென்றும் நாடு பூராகவும் சட்டவிரோதமாக தபால் முத்திரைகள் பொறிக்கப்பட்ட உறைகள் நடமாடிவருவதால் தனியார் ஸ்தாபனங்களில் இவற்றை வாங்கவேண்டாம் என்றும் தபால் அமைச்சு அறிவித்துள்ளது.

தபால் முத்திரைகள் அச்சடிக்கப்பட்ட உறைகளில் உள்ள கடிதங்களுக்கு தபால் கந்தோர் ஊழியர்கள் "சீல்" பண்ணும்போது சந்தமுத்திரைகளை உன்னிப்பாக கவனித்துப்பார்க்கும்படி தபால் அமைச்சு தபால் ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

சட்டவிரோத முத்திரைகளை அச்சடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருபவர்களைக் கண்டுபிடிப்பதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் 7 வருடச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிப்பதற்கு சட்டத்தில் இடமுண்டு.

## உல்லாசப்பிரயாணிகளுக்கு 'குளு குளு' பஸ் சேவை

கோட்டை, திங்கள் இலங்கைக்கு வரும் உல்லாசப்பிரயாணிகளுக்கு இலங்கைத் தேயிலையின் சிறப்புபற்றிப் பிரசாரஞ்செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இலங்கைத் தேயிலைப் பிரசாரசபை ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. உல்லாசப் பிரயாணிகள் நாடு பூராவும் பஸ் மூலம் பிரயாணஞ் செய்வதற்கு உதவுமுகமாக இ. போ. ச. குளிரூட்டிய பஸ் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. நாட்டின் சகல பாகங்களுக்கும் உல்லாசப்பிரயாணிகள் உல்லாசமாகச் சென்று திரும்ப இச்சேவை உதவுவதுடன் இ. போ. ச. வுக்கு மேலதிக வருமானம் கிடைக்கவும் வழிபிறக்குமெனத் தெரிகிறது.

## யாஹ்யா - பூட்டோ பேச்சுவார்த்தை ஆரம்பம்

கராச்சி, செப். 13

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாட்டின் பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது குறித்து பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோ, ஜனாதிபதி யாஹ்யாகானுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார்.

யாஹ்யாவுடன் நடாத்தும் இறுதிப் பேச்சுவார்த்தை இதுவாகவே இருக்குமென திரு. பூட்டோ அறிவித்திருப்பதால், இப்பேச்சுவார்த்தையின் முடிவிலேயே பாகிஸ்தானின் எதிர்காலம் தங்கியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கராச்சியில் இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகளைப்பற்றி உடனுக்குடன் ஆலோசனை கலப்பதற்காக தனது ஆலோசகர்களை கராச்சிக்கு வருமாறு பூட்டோ அழைப்பு விடுத்துள்ளார்.

இவர்களது பேச்சுவார்த்தை வெற்றி அளிக்குமா என்பது சந்தேகமே என பி.பி.ஸி. அறிவித்துள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சியை ரத்துச் செய்து உடனடியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைக்கவேண்டுமென பூட்டோ வலியுறுத்தி வருகிறார். ஆனால் இதற்கு இப்பொழுது காலம் சரியில்லை என யாஹ்யா கூறுகிறார். இதற்குமுன்பாக, யாஹ்யாவை கடுமையாக பூட்டோ தாக்கிப் பேசியிருப்பதோடு, தனது வேண்டுகோள் நிறைவேற்றப்படாவிட்டால் கிழக்குப் பாகிஸ்தான் போலவே மேற்கிலும் வன்முறைகள் ஏற்படுமென எச்சரித்திருந்தார்.

சென்ற 9ம் திகதி பூட்டோ யாஹ்யாவைச் சந்திக்க விருந்ததும் இறுதி

## நாடெங்கிலும் குடிசன தொகை மதிப்பீடு

யாழ்ப்பாணம், செவ்வாய் 1971-ம் ஆண்டிற்குரிய குடிசன மதிப்பெடுப்பு இம்மாதம் 20-ந் திகதிமுதல் 10 நாட்களுக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காகவொவ்வொரு கிராமமும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு கணக்கெடுப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். குடிசனத் தொகையுடன் வீட்டுவசதித் தொகை கணிப்பு விபரங்கள், புத்தகங்களின் தொகை ஆகியனவும் மதிப்பெடுக்கப்படும்.

கணக்கெடுப்பாளர்கள் தாம் பதிவுசெய்து கொள்ளும் எந்த விபரத்தையும் அந்தரங்கமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

கணக்கெடுப்பவர் பதிவு செய்வதற்கு ஒரு வீட்டிலுள்ளவர்களை கேட்கும் கேள்விகளுக்கு விடை கூற மறுப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அக்டோபர் மாதம் 9-ம் திகதி இரவு 11மணிவரை இறுதி மதிப்பு செய்யப்படும்.

அக்டோபர் மாதம் 9-ம் திகதி மாலை 5 மணியிலிருந்து 11 மணிவரை சகலரையும் அவரவர் வீடுகளில் இருக்கும்படி குடிசனமதிப்பீடு அத்தியட்சகர் அறிவித்துள்ளார். அன்று மாலை 3 மணிக்குப்பின்னர் நடைபெறவிருக்கும் சமூகநிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றை நடத்த வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

'இலங்கைவங்கி கிளைகளுடன்

## தமிழர்கள் தமிழிலேயே தொடர்பு கொள்ளுங்கள்'

கோட்டை, திங்கள் நாடெங்கிலுமுள்ள இலங்கை வங்கிக் கிளைகளுடன் தமிழர்கள் தமிழிலேயே தமது தொடர்புகளை வைக்காதுவிட்டால் தமிழ் இளைஞருக்குள்ள ஒரு சில உத்தியோகவாய்ப்புக்களையும் அவர்கள் இழந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது" என உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக் கிளை இலங்கைத் தமிழர்களுக்கு வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக் கிளை அமைப்புச் செயலாளர் திரு. ச. நவசோதி விடுத்தசெய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்த மாதம் இருபதாம் திகதிக்கு முன் இலங்கை வங்கியுடன் எந்த மொழியில் கடிதத் தொடர்புகளை தொடர்ந்து வைத்திருக்கப் போகின்றீர்களெனத் தெரிவிக்குமாறு அதன் வாடிக்கைக்காரர்களுக்கு இலங்கை

(5ம் பக்கம் பார்க்க)

நேரத்தில் தனக்கு உடல்நலமில்லையெனக்கூறி தனது சந்திப்பை தாமதித்துச் செய்ததும் தெரிந்ததே.

(முன்னையசெய்தி 3ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கொலை வழக்கு: இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ் இவ் வழக்கில் குற்றப்பத்திரிகை என்னால் தாக்கல் செய்யப்பட்டது. சாட்சிகள் பட்டியலையும் நானே தயாரித்தேன். தடயப் பொருட்களின் விபரங்களையும் நானே தயாரித்தேன் பருத்தித்துறை கொலை வழக்கில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் பி. செனிவரத்தின மேற்கண்டவாறு கூறினார். இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இன்ஸ்பெக்டர் செனிவரத்ன சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: திறப்பு இவ் வழக்கில் தடயப்பொருள்களில் ஒன்றாகும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும்வரை அதனை நான் வைத்திருந்தேன். இவ் வழக்கில் 14 தடயப்பொருட்கள். அவற்றில் திறப்பு, ரேடியோ ஆகியவையும் அடங்கியிருந்தன.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## வரிவிளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பெறுமதியானது. ஒரு வைக்கட் மின்கலத்தை சலவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் மின்கலத் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 3520

### விற்பனைக்கு

இந்திராணி பத்திகள்: நறுமணம் மிக்க உயர்தரமான பத்திகள் திறம் சாம்பிராணி, சந்தனம் வாசனைச் சரக்குகள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டவை. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், செட்டியார் தெரு, கொழும்பு 3523

EY 4538 நல்ல நிலையிலுள்ள A 40 சோமசெற் கார் விற்பனைக்கு அல்லது மாற்றத்துக்கு. விபரங்களுக்கு: பத்திரதாசன் கம்பாரி கன்நிலையம், அச்சுவேலி. 3325

நவராத்திரிமாலை; சக்தி பூஜைக்குரிய பாடல்கள் (சரஸ்வதி வணக்கம், இலக்குமிதுதி, பராசக்திவணக்கம்) சக்தி தத்துவத்தை விளக்கும் கதைகள், சக்தி தத்துவக் குறிப்பு முதலியன அடங்கிய "நவராத்திரி மாலை" விற்பனைக்குண்டு. சகல புஸ்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தனலக்குமி புஸ்தகசாலை, சுன்னாகம். விலை: சதம் 70. 3575

### தேவை

கடைச்சல் பொருத்து வேலைக்கு ஓர் சாதாரணதர வேலையாள் 25 வயதிற்குட்பட்டவர் தேவை. விண்ணப்பிக்கவும், யந்திரம்ஸ், 48, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 3573

12 வயதுக்குமேல் பெண், வீட்டு வேலைக்குத் தேவை. வீட்டுக்காரன், 18/2 றெயில் ரோடு, கொக்குவில். 3572

புதிதாக திறக்கப்படவிருக்கும் ஸ்ரீ சண்முகபவான் கோட்டலுக்கு தேநீர் தயாரிப்பவர், பரிமாறுபவர், குசினி ஆள் தேவை அனுபவம் உள்ளவர் கவனிக்கப்படும். காலை 9 மணிக்கும் 3 மணிக்குமிடையில் (பஸ்ரியான் பிறெஸ்ஸுக்குமுன்) சந்திக்கவும். 141. பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3574

## 'பாரதிகனவை நிறைவேற்ற வேண்டும்'

அரியாலை, திங்கள்

"பாரதியார் கண்ணனிடம் நெஞ்சைப் பறிகொடுத்தவர். அவனை பாடிப்பரவிக் கவலையைப் போக்கியவர். இயற்கை அழகில் அவனைக் கண்டவர் பாரதி. யாவருக்கும் விளங்கக்கூடியவகையில் தூய்மையான பாடல்களை எமக்குத்தந்தவர். அவர் மறைந்தாலும் அவருடைய கவிதைகள் அவருடைய பெருமையை எமக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவருக்குவிழா எடுப்பதுடன் நாம் நில்லாது அன்னாரின் கனவுகளை நாம் நிறைவேற்ற வேண்டும்" என நல்லூரில் பாரதிமன்றத்தினரின் பாரதிவிழா ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். உதவி முதல்வர் திரு ஆ. துரைராஜசிங்கம் கூறினார்.

பாரதி விழாவை ஐந்து நாட்கள் கொண்டாடுவது எனவும், பல அறிஞர்களை அழைப்பது என்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

**செங்குந்தர் சந்தையிலிருக்கும் கடை அறை இல: 5இன் குத்தகை 1971—1972**

செங்குந்தர் சந்தையிலிருக்கும் கடை அறை இல 5ஐ 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1972-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி வரையும் குத்தகைக்குக் கொடுக்கும் முகமாக கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதுசம்பந்தமான மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் மாநகர கணக்காளரிடமிருந்து அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
13-9-71 3020

## இப்படியும் நடக்கிறது

உருத்திரபுரம், திங்.

உருத்திரபுரம் மகாதேவா ஆச்சிரமத்துக்கு முன்னுள்ள தபாற்பெட்டியில் இம்மாதம் 8ம் திகதி போடப்பட்ட சுமார் 150 கடிதங்கள் விலாசமிடப்பட்ட இடங்களுக்குப் போய்ச்சேரவில்லை என்பதை அறிந்த மகாதேவா ஆச்சிரம நிர்வாகிகள் உருத்திரபுரம் உபதபால் நிலைய அதிபருடன் தொடர்புகொண்டு தபால் பெட்டியைத்திறந்துபார்த்தபோது 8ம் திகதி போடப்பட்ட கடிதங்கள் அனைத்தும் பெட்டியிலேயே கிடக்கக் காணப்பட்டதாம். 8ம்திகதி தொடக்கம் 12ம் திகதி வரை அந்தப்பெட்டி திறக்கப்பட்டு கடிதங்கள் எடுக்கப்படவில்லையென்பது குறித்து சம்பந்தப்பட்ட தபால் சேவகர்கள் மீது உபதபால் அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## விளையாட்டுப் போட்டி

காரைதீவு, திங்கள்

வேலணை மத்திய மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 24-ம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

.......

உதைபந்தாட்டம்

## 'நொக்கவுட்' போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் கடந்தவார முடிவுகள் வருமாறு:

### பாடும்மீன் வெற்றி

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ். பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் பாடும்மீன் கோஷ்டி ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றது. பொலிஸ் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் சிறிலின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### சென். நீக்கலஸ் வெற்றி

நாவாந்துறை சென். நீக்கலஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், சம்சன் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். நீக்கலஸ் கழகம் 3-2 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. பேனின்பநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### சென். அனரனிஸ் வெற்றி

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம் மிக இலகுவாக 8-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

## விளையாட்டுக்கழக வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலை ஐக்கிய கழகம் அதன் 25 வது ஆண்டு நிறைவு-வெள்ளிவிழாவினைப் பரந்த அடிப்படையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

விழாவையொட்டி கட்டுரை; பேச்சு; சங்கீதம்; நாடகம் ஆகிய கலைப்போட்டிகளுடன் வடகுடா நாடு ரீதியிலான கரபந்தாட்டம் உதைபந்தாட்டம் கிரிக்கெட் முதலிய போட்டிகளையும் கழகம் நடத்தவிருக்கிறது.

வெள்ளிவிழா ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென ஒரு விசேஷகுழு அமைக்கப்பட்டது. குழு நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு இ முத்தையா; உபதலைவர்கள்: திருவாளர்கள் சி இரவீந்திரன்; த சோமசுந்தரம்; எம் சிவரத்தினம்; திருமதி லீலாவதி சபாரத்தினம். இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் பொ குலசேகரம்பிள்ளை சி சதாசிவம். இணைப் பொருளாளர்கள் த சுந்தரலிங்கம், செ செல்வராசா விளையாட்டுச் செயலாளர்: திரு க செல்வராசா. கலைச் செயலாளர்: திரு க கணேசலிங்கம். போஷகர்கள்: திரு அ விகவநாதன், திரு க மகாலிங்கம்; திரு கா கணேசன்; திரு வே தருமலிங்கம்.

நாள்வர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. ......

## வெங்காயத்தை பாதுகாக்க...

யாழ்ப்பாணம், செவ்.

வெங்காயத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் வெங்காயத்தைச் சேமித்து வைத்து நிலைமையைச் சமாளிக்க வடபகுதிக் கூட்டுறவுச் சங்கவிற்பனைக்குளர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பெருமளவில் கிடைக்கும் வெங்காயத்தை நல்ல காற்றோட்டமான இடத்தில் அல்லது பிரம்புக் கூடைகளில் இட்டுவைப்பதன் மூலம் வெங்காயத்தைப்பாதுகாத்துத் தட்டுப்பாடான காலங்களில் சமாளிக்கலாமென அவர் தெரிவித்தார். ஐப்பசி கார்த்திகை, மார்கழி மாதங்களில் பொதுவாக வெங்காயத் தட்டுப்பாடு நிலவுவது வழக்கம்.


5-வது ஜனத்திரள் வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
மற்றும்
கெப்பிட்டல் — பிளாஸா
திரைகளில்



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30,)
★ ஆனந்தன் ★ ஹேமலதா
அசோகன் ★ காமினி ★ ராம்தாஸ்
நடித்த
விஜயபுரி வீரன்
[புத்தம் புதிய கொப்பி]

வெலிங்டன் (பிரசுரம்) — வெஸ்லி சினிமா
மானிப்பாய்
பி ப 2-30 6-30, 10-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை உறவு

நாகலக்ஸ்மி சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
DEATH LAID AN EGG

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-ராமதாஸ்
நடித்த
வீரத்திருமகன்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Walt Disney's
CHARLIE THE LONESOME COUGAN AND DISNEY LAND
(color)

தினசரி பி.ப. 2-00, 9-45
ஏ. பி. நாகராஜன்—
ஜி. வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை நல்லதங்காள்
புதிய கொப்பி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரி. எம். சௌந்தரராஜன்
ஏ. எல். ராகவன்; ராஜ்ஸ்ரீ
நடித்த
கல்லும் கனியாகும்

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிநேகிதி

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
ரவிச்சந்திரன் — பாரதி
தினசரி 2-30 6-30 10-00 சனி, ஞாயிறு 10-30 நடித்த
சிநேகிதி

வின்சர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

# 'யாஹ்யா'வை பூட்டோ சந்திக்கச் செல்கிறார்

## வங்காளப் பிரச்னை தீர கினியா உதவுமாம்

கராச்சி, செப் 13

பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானை மக்கள் கட்சித் தலைவர் அலி பூட்டோ இன்று சந்திப்பார் எனத் தெரியவருகிறது.

பாகிஸ்தானில் ஆட்சியை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதை இறுதி முறையாக வலியுறுத்திக் கேட்பதற்காக திரு. பூட்டோ இன்று ஜனாதிபதி யாஹ்யாகானைச் சந்திக்கச் செல்வார் என மக்கள் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக கராச்சியில் இருந்து வெளிநாட்டுநிருபர் ஒருவர் அனுப்பிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பாக ஜனாதிபதியை இதே விஷயமாகச் சந்திக்கச் செல்லவிருந்த திரு. பூட்டோ இறுதியில் தனது விஜயத்தை ரத்துச்செய்தது அறிந்ததே.

### கினியா ஒத்துழைக்கும்

கிழக்குப் பாகிஸ்தானில் அரசியல்தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் கினியா தனது ஒத்துழைப்பைக் கொடுக்குமென கினியா வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்திய சட்டத்துறை அமைச்சர் திரு எல். ஆர். கோகலே கினியா வெளியுறவு அமைச்சருடன் நேரே பிரில் நடத்திய பேச்சுவார்த்தையின் பொழுதே திரு கோகலேக்கு இவ்வுறுதிமொழியைத் தெரிவித்தாராம்.

### நேபாள பிரதமர் கருத்து

இந்தியாவிலிருக்கும் அகதிகள் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச்செல்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென்பதே நேபாளத்தின் விருப்பம் என நேபாளப் பிரதமர் காட்மாண்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மேலும் தெரிவிக்கையில், இந்திய சோவியத் ஒப்பந்தம், கம்யூனிஸ்ட் சீனவுக்கு அமெரிக்க அதிபர் நிக்சனின் விஜயம் ஆகிய இரு சம்பவங்களும் சர்வதேச நெருக்கடிகளை தனிப்பதற்கான உறுதியிக்க நடவடிக்கைகள் என்றார்.

---

மேற்காசிய நிலைமைபற்றி

## எகிப்திய தலைவர்களுடன் ஹியூம் பேச்சுவார்த்தை

கெய்ரோ செப் 13

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் எகிப்தியத்தலைவர்களுடன் இன்று தனது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக திரு ஹியூம் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்கு வந்துசேர்ந்த சில மணித்தியாலங்களின் பின் ஆரம்பித்தார்.

திரு ஹியூம் எகிப்தின் வெளிநாட்டமைச்சர் திரு றியாட்டுடனும் உபஜனாதிபதி திரு ஹசனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றார். நாளை இவர் மத்தியகிழக்கு நிலைமைபற்றி அவர்களுடன் விரிவாக ஆராய்வாரெனத் தெரிகிறது.

1967-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபை எடுத்த தீர்மானங்களின்படி இஸ்ரேல் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமென்பதே பிரிட்டனின் கொள்கை என்று திரு ஹியூம் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்பொழுது தெரிவித்தார்.

எகிப்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் திரு. ஹியூம் மொராக்கோ செல்வார்.

மேற்காசியப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண பிரிட்டன் முயன்று வருகிறது. அரபுத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் திரு ஹியூம் இவ்வருடக் கடைசியிலோ அல்லது 1972-ம் ஆண்டு முற்பகுதியிலோ இஸ்ரேலுக்குச் செல்வார் என அறியப்படுகிறது.

### அரபு ஒற்றுமை அவசியம்

தமது பொது எதிரியான இஸ்ரேலை எதிர்த்துப்போராடுவதற்கு அரபு மக்கள் தம்மிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்படவேண்டும் என்று செய்ரோவில் நடைபெற்ற 14 நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அரபு மகாநாட்டு பொதுக் காரியதரிசி டாக்டர் அப்துல் கலேக் ஹஸவுனா இதனை வலியுறுத்திப் பேசுகையில் நாலாண்டுகளுக்குப் பின்பும் கூட அரபு நிலங்களை இஸ்ரேல் பிடித்துவருகிறது. எப்பொழுதையும் விட இப்பொழுதுதான் அரபு மக்களின் ஒற்றுமை அவசியம் என்றார்.

ஐ நாவில் மேற்காசியப் பிரச்னையை விரிவாக ஆராய வழிகாண்பதும் ஜோர்டானில் கொரில்லாக்கள் விஷயம்பற்றி ஆராய்வதுமேஇம் மகாநாட்டின் நோக்கமென சொல்லப்படுகிறது.

பாலஸ்தீனக் கொரில்லாக்களுக்கும் ஜோர்டான் மன்னர் ஹுசேனுக்குமிடையேயுள்ள பிரச்னையில் இணக்கம் காண்பதற்கு எகிப்தும் சவூதி அரேபியாவும் கூட்டாகத் தொடர்ந்து முயற்சி எடுக்கவேண்டுமென இம் மகாநாடு வலியுறுத்தியதாக உயர்தர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

எகிப்தையும் சவூதி அரேபியாவையும் இவ்விஷயமாக ஒன்றுக்குவதற்கு சிலகாரணங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

......

## குருஷேவ் மரணத்திற்கு சோவியத் அனுதாபம்

மாஸ்கோ, செப் 13

சோவியத்தின் முன்னாள் பிரதமர் நிகிட்டாவ் குருஷேவின் மரணத்திற்கு இன்று உத்தியோகபூர்வமாக சோவியத் அரசு அனுதாபம் தெரிவித்துள்ளது.

திரு குருஷேவ் பற்றி மாஸ்கோ வானொலிச் செய்திகளை இன்று ஒலிபரப்பியது பிராவ்டாவில் அவரது புகைப்படமில்லை பிரசுரிக்கப்பட்டிருந்தன. குருஷேவின் மரணச்சடங்கில் சோவியத் அரசுத்தலைவர்களும் கலந்துகொள்வார்கள் எனத் தெரிகிறது.

---

தமிழ்நாட்டில்

## புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

செல்லை, செப். 13

புற்றுநோயைத் தீர்ப்பதற்கான புதுவகை மருந்தொன்றை தமிழ்நாட்டின் வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிடைக்கும் ஒருவகை மூங்கிலிலிருந்து தயாரிக்கப்பட்ட இம் மருந்து புற்றுநோயை முற்றாகக் குணப்படுத்தும் சக்தியுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மருந்தை புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 4 வயதுக் குழந்தைக்குக் கொடுத்ததில் அந்நோய் முற்றாக மாறிவிட்டதாகவும், இப்புதுவகை மருந்தை மேலும் ஆராய்வதற்காக பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிகிறது.

......

## பொன்னாலை தீர்த்தத் திருவிழா

சுழிபுரம், திங்கள்

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் தீர்த்தவைபவம் சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இரவு தீர்த்தக்கரை கலைவிழாப் போல் காட்சிதந்தது. தவில் கச்சேரிகள் நடைபெற்றன. இரவு ஒன்பது மணிக்கு மேல் மின்சார வெளிச்சத்தால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மஞ்சத்தில் சுவாமி பொன்னாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

---

## தெலுங்கானாதலைவர்களுடன் சி.எஸ்.பேச்சுவார்த்தை

சென்னை செப் 13

ஆந்திர முதலமைச்சர் திரு பிரமானந்தரெட்டி ராஜினாமாச் செய்ததினால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி தெலுங்கானாத் தலைவர்களுடன் மத்திய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இவ்விஷயம்பற்றி ஹைதராபாத்தில் திரு. சுப்பிரமணியம் பல அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். பிரதேச காங்கிரஸ், தெலுங்கானா கமிட்டி உட்பட பல தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதுபற்றி தான் பின்பு பிரதமர் இந்திரா காந்தியிடம் விரிவாக எடுத்துச் சொல்லப் போவதாக அவர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

---

## 'நம்நாட்டுக்கலைஞர்களை ஊக்கமளித்து வளர்ப்போம்'

சுன்னாகம், திங்கள்

"ஆக்கமும் ஊக்கமும்மிக்க கலைஞர்கள் எம்நாட்டில் அதிகமாக இருக்கையில் இந்தியா போன்ற பிறநாட்டை கலைவளர்ச்சிக்கு எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நம்நாட்டுக் கலைஞர்களை நன்கு பயன்படுத்துவோமானால் எமது இனத்தின் பாரம்பரிய கலாச்சார வளர்ச்சி மேன்மேலும் புத்துயிர் பெற்றுக் கொள்ளும்.

கலாச்சார வளர்ச்சிக்கு அரசாங்கம் பலதரப்பட்ட உதவிகளை செய்ய முன்வந்துள்ளது. இதற்கு பொது மக்களும் தங்கள் ஒத்தாசையை தரவேண்டும்"

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா சண்டிலிப்பாய் மத்திய சனசமூக நிலையத்தின் 22-வது ஆண்டு நிறைவை ஒட்டியும் நாம் இலங்கையர் இயக்கத்தின் ஓராண்டு நிறைவை ஒட்டியும் சண்டிலிப்பாய் சந்திக்கருகில் நடாத்திய முதல் நாள் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. விநோதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் வலி. மேற்குக் காரியாதிகாரியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு வலி-மேற்கு கலாசார உத்தியோகத்தர் செல்வி இராசதுரையும் சொற்பொழிவாற்றினார்.

கலைநிகழ்ச்சிகளுடன் 'மயானத்தில் மன்னன்', 'விதியா சதியா' ஆகிய நாடகங்கள் இடம்பெற்றன. நாம் இலங்கையர் இயக்கத் தலைவர் நன்றியுரை வழங்கினார்.

......

## இன்று இரங்கற் கூட்டம்

வவுனியா செவ்வாய்

வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதனது மறைவு குறித்து வவுனியா நகரசபை மைதானத்தில் இரங்கற்கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது. வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில்பலர் சொற்பொழிவாற்றுவர்என எதிர்பார்க்கப்படுகிறது.

......

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்

இருப்பிட்டி சித்திவிநாயகர் வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி மீரு சந்திரசேகரம் இம்மாதம் முதல் அளியாலை பார்வதி வித்தியாசாலைக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

0 0 0

யாழ்ப்பாணம், செவ்

வவுனியா மாவட்டத்திலுள்ள மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தலைமை ஆசிரியராயிருந்த திரு. நா. கு. பசுபதிப்பிள்ளை இம்மாதம் தொடக்கம் புதுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகியுள்ளார்.

---

## பாரதிக்கு நினைவுக் கட்டிடம்

சென்னை, செப். 13

புரட்சிக்கவிஞர் சுப்பிரமணிய பாரதிக்கு சென்னையில் நினைவுக்கட்டிடம் அமைப்பதற்கு தகுந்த இடமொன்றை தமிழ்நாடு அரசு வழங்கவிருக்கிறது.

இங்கு நடைபெற்ற பாரதி நினைவு விழா ஒன்றில் பேசிய தமிழ்நாடு முதல் மந்திரி திரு. மு கருணாநிதி இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

......

## குழந்தைகளுக்கு பால்மா இல்லை

புத்தளம், திங்கள்

புத்தளத்திலுள்ள சிறு குழந்தைகளுக்கு கட்டுறவு பண்டகசாலையில் இருந்து பால்மா பெறுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கூப்பன்கள் இல்லாத குழந்தைகளுக்கு பால்மா மறுக்கப்படுகின்றதாம். காரியாதிகாரி அலுவலகமோ குழந்தைகளின் பிறப்பு சாட்சிப்பத்திரம் இன்றி கூப்பன் விநியோகம் செய்வதில்லையென தடங்கல் விதிக்கின்றது. ஆனால் புத்தளம் பிறப்பு இறப்பு பதிவுக் கந்தோரோ பிறப்பு இறப்பு சாட்சிப் பத்திரத்திற்கு விண்ணப்பம் கொடுப்பவர்களுக்கு பத்திரம்தர குறைந்தது 10, 12 நாட்களுக்கு மேலாகின்றதாம். இதனால் அதிகாரிகளை இவ்விடயத்தில் ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளார்களாம்.

......

## மன்னாரில் மரமுந்திரி செய்கை

கோட்டை, திங்கள்

மரமுந்திரிகைச் செய்கையை மன்னார்ப் பகுதியில் மேலும் விஸ்தரிக்கத் தோட்டத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தீர்மானித்துள்ளார்.

நீர்ப்பாசனம் செய்ய வசதியற்ற மன்னாரின் கரையோரப் பகுதிகளில் இம் மரமுந்திரிகையைப் பயிரிடுவதற்கான திட்டமொன்றை தோட்டத் தொழில் அமைச்சு தயாரித்துள்ளது.

64 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகைச் செய்கையை மேற்கொள்வதே அமைச்சின் நோக்கமாகும்.

நினைவு அஞ்சலி:

# உரும்பராய் 'தர்மர்'



உயர்ந்த பண்புகள் அமைந்த, தர்மசீலராய் விளங்கியவர்தான் காலஞ்சென்ற உரும்பராய்ப் பகுதி மரண விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. கா. தர்மலிங்கம்.

உரும்பராய்ப் பகுதியில் விதானையாராகக் கடமையாற்றிய பொழுது இவர் செய்த சேவைகள் பலப்பல. "வாழ்க்கையில் நம்மை உயர்நிலையில் ஏற்றி வைப்பதும், தாழ்நிலையில் தள்ளிவிடுவதும் நம்முடைய மனப்பான்மை ஒன்றேதான். மற்ற மனிதர்களெல்லாம், நம்முடைய மனப்பான்மையால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிற வெறும் கருவிகளே. நம்முடைய நன்மைக்கோ தீமைக்கோ அவர்கள் கர்த்தாக்கள் அல்லர்" என்பது இவரது குறிக்கோள். இப்பகுதியில் நடக்கும் காணிப் பிரச்சினைகள் பலதரப்பட்ட குடும்பப் பிரச்சினைகள் போன்றவற்றை பெரும்பாலும் நீதிமன்றங்களில் செல்லவிடாது தடுத்து தனது திறமையால் இரு பகுதியினரையும் சமாதானப்படுத்தி பிரச்சினைகளை மிகவும் சுலபமாகத் தீர்த்தவர். அநேகரின் திருமணச் சடங்குகளை முன்னின்று நடத்தியவர். பாடசாலைகள், சனசமூகநிலையங்கள், இளைஞர் விவசாயக்கழகம், மருத்துவமனை போன்றவற்றுக்காக அயராது பாடுபட்டவர். வெள்ளம், சூறாவளி போன்ற இயற்கையின் கொடுமைகளுக்கான நேரங்களில் அரசாங்க திணைக்களங்களுடன் உடனடித் தொடர்புகொண்டு வீடிழந்தோருக்கும், பயிரழிவால் ஏற்பட்ட கமக்காரர்களுக்கும் நிவாரணம் பெற்றுக் கொடுத்தவர். ஏழைகளின் அன்பைப் பெரிதும் கவர்ந்தவர். குறிப்பாக பொதுமக்களுக்கு தன்னால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்தவர்.

நேர்மையான சேவையும், பொதுமக்கள்மேல்கொண்ட அன்புமே இவரை மரண விசாரணை அதிகாரிபதவிக்கு உயர்த்தியது. பின் ஏலவிற்பனையாளராகவும் கடமை புரிந்தார்.

பழம்பெருமைகள்யாவும் ஒருங்கே நிறைந்த உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலில் திருவாதவூரடிகள் புராணபடனம் நடக்கும் திருவெம்பாவைக் காலத்தில் படிப்பவர்களுக்குள் திரு தர்மலிங்கம் முக்கிய இடத்தைப்பெற்றார்.

சிவன்கழல் மறவாத சிந்தையும் சிவனடியாரைப் போற்றும் நல்ல பண்பையும் இவர்பெற்றதினால் நாட்டுக்கு அவர் செய்தசேவையும் பூரணத்துவம் எய்தியது. உரும்பராய்ப்பதியை அலங்கரித்துக்கொண்டிருந்த உத்தமராம் திரு கா தர்மலிங்கத்தினதுபிரிவு நமக்கு ஈடுசெய்ய முடியாதபேரிழப்பாகும். இன்று அவரது அந்தியேட்டித்தினமாகும்

...சு. சிவநேசன்.

## மாப்பிள்ளை பிடிக்கவில்லையாம்! இளம்பெண் தற்கொலை

மட்டுவில், திங்கள்

நீங்கள் பேசிய மாப்பிள்ளையை எனக்குப் பிடிக்கவில்லை. எனவே நான் மருந்து குடித்துச் சாகிறேன். என் மரணத்தையிட்டு எவரையும் சந்தேகப்பட வேண்டாம். எனது உடலை மட்டும் சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்யுங்கள்.

இப்படி ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டு கைதடி மேற்கைச் சேர்ந்த கதிரன் நாகம்மா என்ற 17 வயது இளம்பெண் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றிய தகவல் கிடைத்ததும் சாவகச்சேரிப்பொலிசார்சென்று ஸ்தலத்திற்கு விரைந்து புலன் விசாரணை நடத்தினார்கள். சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே திரவியநாயகம் மரணவிசாரணை நடத்தினார் விசாரணையின்போது இறந்தவரின் தந்தையான பண்டாரி கதிரன் சாட்சியமளிக்கையில், இறந்தவர் என் மகள்தான். அவரின் கல்யாணவிஷயமாக நீண்டநாள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. நேற்றும் இதுசம்பந்தமாகஒரு சம்மந்த பேச்சுவார்த்தைக்காகவே நானும் எனது மனைவியான இறந்தவரின் தாயாரும் போயிருந்தோம். அப்பொழுது எனது மகள் நஞ்சுமா மருந்து குடித்து இறந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டதும் பேச்சை நிறுத்தி வீடுதிரும்பினேன் என்றார்.

தாயாருடைய சகோதரர்களினுடைய சாட்சியங்களை பதிவு செய்துகொண்ட மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பிரிவுபசாரம்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலையின் பதில் அதிபராக எட்டு வருடங்கள் கடமையாற்றி வெளிநாடு செல்லும் திரு ஏ. பிரான்சிஸுக்கு பிரிவுபசார விழா ஒன்றை ஊழியர்கள் நடாத்தினார்கள்

மேற்படி தொழிற்சாலையின் இரட்டைக் குடிசை மைதானத்தில் நடைபெற்ற இப் பிரிவுபசாரவிழாவுக்கு திரு எஸ். சிவப்பிரகாசம் தலைமைவகித்தார்.

தொழிற்சாலைக்கு அவர் ஆற்றிய சேவைகளையும் இவர் இங்கிருந்து செல்வதால் தொழிற்சாலைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் திரு என். நாகராசா எஸ். சிவப்பிரகாசம் உட்பட மற்றும்பலர் உரையாற்றினார்கள்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு திரு பிரான்சிஸ் நன்றி கூறினார்.

## சைவப்புலவர்

வேலணை, செவ்

இம்மாதம் 18, 19-ந்திகதிகளில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 8-வது சைவப்புலவர் மகாநாடும் பட்டமளிப்பு விழாவும் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் பண்ணிசைக் கச்சேரி, சமயச்சொற்பொழிவுகள் கருத்தரங்கு நாடகங்கள் ஆகியன இடம் பெறும்.

## முத்தமிழ்-மெய்வல்லுநர் விழாக்கள்

முசலி, திங்கள்

நாளைபிற்பகல் நானாட்டான் மேற்கு கிராமசபை விளையாட்டரங்கில் மெய்வல்லுநர் போட்டி விழாவும் முத்தமிழ் விழாவும் நடைபெறவிருக்கிறது. போட்டியில் பரிசுபெறுவோருக்கு நானாட்டான் மேற்கு கிராமசபைத்தலைவர் திரு. சூ. இம்மனுவேல்பிள்ளை பரிசில்கள் வழங்குவார்.

மாலை நடைபெறும் முத்தமிழ் விழாவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு ச. கதிர்காமநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். மட்டக்களப்பு ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை உட்படப் பலர் இலக்கியப் பேருரை நிகழ்த்துவர். இறுதியில் நாடகங்கள் நடைபெறும்.

0 0 0

ஊர்காவற்றுறை ... நயினாதீவு, திங்கள்

வேலணை கிழக்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழா மூன்று தினங்கள் தொடர்ச்சியாக முத்தமிழ் விழாவாகக்கொண்டாடப்படவிருக்கிறது. இதையொட்டி வெள்ளி விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது இம்மலரில் வேலணைக்கிராமத்தைப்பற்றிய பல சுவையான தகவல்கள் சரித்திரக் கண்ணோட்டத்துடன் வெளியிடப்படும்.

......

## கம்பிக் கள்வர்மேல் கடும் நடவடிக்கை

கோப்பாய், திங்கள்

தந்தித் தொடர்புக் கம்பிகளைத் திருடுபவர்களைக் கண்டுபிடிக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தபால் தந்தித் தொடர்பமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கம்பித் திருடர்களைக் கண்டுபிடிக்க தந்தித் தொடர்பு ஊழியருக்கு பொலிஸ், கிராமசேவகர்கள், காரியாதிகாரிகள் ஆகியோர் உதவுவர் எனவும் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்படுபவர்கள்மேல் அவசரகால சட்டத்தின்கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

தினமும் லட்சக் கணக்கான ரூபாய் இக்கம்பித் திருட்டால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் அமைச்சர் குமாரசூரியர் குறிப்பிட்டுள்ளார்.

——

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ். 14—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

249 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இன்னிசை நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இன்னிசை பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 இளைஞர் கண்டுபிடிப்பு, 6-30 செய்தி விமர்சனம், 6-45 உரைப் பாட்டு, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 வீணை, 7-45 உரைநிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கல்விக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

இனத்தைக் காக்க

## மொழியும் கலாச்சாரமும் காப்பாற்றப்பட வேண்டும்

—கோப்பாய் எம் பி

பருத்தித்துறை, திங்.

முன்னெப் பொழுதுமில்லாத அளவுக்குத்தமது கலாசாரத்தையும் மொழியையும் பேணவேண்டிய அவசியமும் பொறுப்பும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மொழியும் கலாச்சாரமும் மறைந்துவிட்டால் இனரீதியில் தமிழினமென ஒன்று இருக்கமுடியாது. எனவே எமது இனம் அழியாது பாதுகாக்கப்பட வேண்டுமாயின் மொழியும் கலாசாரமும் பாதுகாக்கப்படல் வேண்டும்.'

இவ்வாறு கிருப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலையத் திறப்புவிழாவில் குத்துவிளக்கேற்றி வைத்துப் பேசிய கோப்பாய் எம் பி திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினார்.

வலி. கிழக்கு காரியாதிகாரி திரு' க. கந்தப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், புத்தூர் கிராம சபைத் தலைவர் திரு மு திருநாவுக்கரசு திரு. சம்பவடிவேலு திரு. க. துரைசிங்கம், திரு. வி. யோகசாமி, திரு என். தில்லைச்சிற்றம்பலம் ஆகியோரும்பேசினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

'கலை,கலாச்சாரத் துறையில்

## ஈழத்து தமிழர் மத்தியில் புதிய விழிப்புணர்ச்சி'

முன்னாள் நீதியரசர் தம்பையா பெருமிதம்

வெள்ளவத்தை, திங்கள்

"மிகச்சமீபகாலமாக ஈழத்தில் தமிழர்கள் மத்தியில் எமது கலை, கலாச்சாரத்தைப் பேணி வளர்க்கவேண்டும் என்ற புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் மன்றங்களை உருவாக்கி இயக்கி வந்துள்ளனர், அரசாங்க திணைக்களங்களிலும் குறிப்பிடத்தக்க வகையில் தமிழ் இலக்கிய மன்றங்கள் உருவாகித் தமிழையும் தமிழர்தம் கலை, கலாச்சாரங்களையும், வளர்த்து வருகின்றன. பாரதிக்கு விழா எடுத்துப் பெருமைப்படும் மன்றத்தாரை நான் பாராட்டுகிறேன். பாரதி உலககவி அவன் கவிதைகள் காலத்தால் அழியாதவை.'

இவ்வாறு முன்னைநாள் உயர்நீதிமன்ற நீதியரசர் கௌரவ எச் டபிள்யூ தம்பையா கியூ. ஸி வம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் நடாத்திய பாரதிவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மன்றத் தலைவர் திரு க. சிவசம்பு வரவேற்புரை நிகழ்த்தினார்

பாரதி காட்டிய விழிப்புணர்ச்சி என்ற தலைப்பில் திரு இரா சிவலிங்கம் பேசுகையில், "இன்று நாம் அனைவரும் மேடையில் நின்று பேசுவதற்கும் அழகாகக் கவிதைகளை வாசிப்பதற்கும் களம் அமைத்துக் கொடுத்தவன் பாரதி. நாம் அனைவரும் காலத்தின் குழந்தைகள். பாரதி வாழ்ந்த காலம் வேறு! அது விக்டோறியா மகாராணியின் ஆட்சிக்காலம். 1905ல் பாரதி அரசியல்வாதி ஆனான். முற்காலக் கவிஞர்கள் இறைவனை, இயற்கையை, மன்னரை, பிரபுக்களைப் புகழ்ந்து பாடினார்கள். பாரதி துணிந்து அரசியல் பாடினான்-பாமர மக்களைப் பாடினான் - சமுதாயப் பிரச்சினைகளை தொட்டுத்தள்ளினான். அதனால் அவன் கவிதைகள் உயர்ந்தன. அவன் புகழ் உயர்ந்தது. கார் பற்றிக்கு எப்படி சார்ஜ் ஏற்றுகிறோமோ அதுபோலவே ஆண்டுதோறும் பாரதிக்கு விழாவெடுத்து எமது தமிழுணர்ச்சிக்கும் உரிமைக்கிளர்ச்சிக்கும் சார்ஜ்' ஏற்றிக்கொள்ளவேண்டும்' என்றார்.

'திடங்கொண்டு வாழ்ந்திடுவோம், தேம்பல் வேண்டா' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்கு திரு க செ நடராசா தலைமை வகித்தார். கவிஞர்கள் இ சிவானந்தன், இ முருகையன் அம்பிகைபாகன்(அம்பி) சசி ஆனந்தன் சில்லையூர் செல்வராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செல்வி மேனகா சிவசம்புவின் நாட்டியாலய மாணவிகள் பாரதி வாழ்க்கைமுறை பற்றிய நாட்டிய நாடகம் நடாத்தினார்கள்.

திரு செ சிவயோகநாதன் நன்றியுரை கூறினார்

## தரமான நூல்களை வரவேற்க வேண்டும்

பருத்தித்துறை, திங்கள்

ஒரு பொதுநூல் நிலையத்திற்கு தரமானதும் பொது வாழ்வுக்கு உபயோகமானதுமான நூல்கள் அவசியம். எந்த நாட்டிலிருந்து வந்தாலும் தரமான நூல்களை நாம் வரவேற்க வேண்டும் இன்று மாணவர் மத்தியில் ஆங்கில அறிவு மிகவும் குறைந்திருப்பதால் சிறந்த ஆங்கில நூல்களை நாம் கூடிய விலை கொடுத்து வாங்கியும் எதுவித பலனுமேற்படாது.

இவ்வாறு நெல்லியடிப்பகுதி பட்டினசபைத்தலைவர் திரு எம் பி. தேவசகாயம் மேற்படி சபை நூலகக்குழுக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி பட்டினசபை நூலகத்திற்குமின்சார வசதியளிக்க வேண்டுமென்றும் சைக்கிள்கள் பாதுகாப்பாக வைக்க ஒரு கட்டடம் அமைக்க வேண்டுமென்றும் மலசலகூடம் அமைக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

—

## புதிய கிராமசேவகர் பிரிவுகள்

பருத்தித்துறை, திங்.

உள்ளூராட்சி அமைச்சின் திட்டத்தின்படி வடபகுதியில் சிறுபான்மைத் தமிழர் தொகையாக வாழும் பகுதிகள் ஒரு கிராமசேவகர் பிரிவாகப் பிரகடனம் செய்யப்படுவதுடன் இப்பகுதிகளுக்கு சிறுபான்மைத் தமிழினத்தைச் சேர்ந்தவர்களே கிராம சேவகராக நியமிக்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது முன்னோடியாக கரவெட்டிப் பகுதியிலேயே இவ்வித திட்டம் நடைமுறைக்கு வரவிருப்பதாகத் தெரிகிறது.

நெல்லியடிப் பட்டின சபைக்குட்பட்ட அனுவில், கப்புடி ஆகிய வட்டாரங்களும், கட்டைவேலிக் கிராம சபையைச் சேர்ந்த மத்தொனி வட்டாரமும் சேர்க்கப்பட்டு கரவெட்டி மத்தி என்ற கிராம சேவகர் பிரிவாக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

# ‘சைவத்தை வளர்ப்பதே கழகத்தின் பணி’

யாழ்ப்பாணம், செவ்.

“தமிழ் உடல் என்றால் சைவம் அதன் உயிராகும். தமிழரின் நாகரீகம், கலை, பண்பு, அன்பு, நெறி இவை யாவினோடும் ஊடுருவி நிற்பது சைவம். நாவலர் பெருமான் சைவத்தைக் காப்பதன் மூலம் தமிழையும் தமிழ்ப்பண்பையும் காப்பாற்றினார். இன்று நாவலர் போன்ற தியாகிகள் இல்லையாதலால் இவ்விஷயத்தில் நாம் உஷாராயிருக்கவேண்டும்.”

என்றிவ்வாறு நல்லூரில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவ நெறித்தொண்டர் கழக அமைப்பு வைபவத்தில் தலைமையுரையாற்றுகையில் வித்துவான் க. வேலன் கூறினார்.

பிறமதத்தவர் தம்சிறார்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே மதஅறிவோடு மத உணர்வையும் புகுத்திவிடுகிறார்களென்றும் சைவப் பிள்ளைகளிற் பெரும்பாலோர் காட்டிலே வளரும் செடிகள் போல் தாமே வளர்ந்து தாமே உணரும் நிலையிலுள்ளதாகவும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

கழகச் செயலாளர் திரு க. மகேசன் பேசுகையில், நமது பிற்சந்ததியார் சைவ உணர்வும் பண்பும் உள்ளவர்களாக வாழச்செய்வதும், பன்னிரு திருமுறைகளிலும் பதினான்கு சைவ சித்தாந்த நூல்களிலும் உள்ளபடி சைவசித்தாந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவதோடு அவற்றுக்கு விஞ்ஞான முறையில் விளக்கம் கொடுப்பதும், மக்களின் உள்ளத்தில் சைவத்தின் தூய்மையையும் மேன்மையையும் பதியவைப்பதுவும் கழகத்தின் பணியாகுமெனக் கழகத்தின் நோக்கங்கள் பற்றி விளக்குகையில் தெரிவித்தார்.

சைவசமயம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத இடங்களில் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல், சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், திருமுறைகளைப் பண்ணுடன் ஓதக்கூடிய ஆசிரியர்களை பயிற்றுவித்தல், செல்வவளமுள்ள ஆலயங்களில் கிடைக்கும் மேலதிக வருவாயைக் கொண்டு அறநிலையங்களை நடத்த ஒழுங்குசெய்தல், வறிய நிலையிலுள்ள கோவில்களை நடத்த ஒழுங்குசெய்தல், அழியும் நிலையிலுள்ள புராதன கோவில்களைப் புனருத்தாரணம் செய்தல் முதலியன உட்பட சைவசமயம் சம்பந்தப்பட்ட அபிவிருத்திப்பணிகளை இக்கழகம் மேற்கொள்ளும் எனச் செயலாளர் திரு மகேசன் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

# “கயரோகத்தை பூண்டோடு அழிக்க உழைக்கும் சங்கம்”

மட்டுவில், திங்கள்

“சமூகத்தைச் சிறுகச்சிறுக அழித்துக் கொண்டிருக்கும் இக்கொடிய கயரோகத்தை பூண்டோடு அழிப்பதற்காக உழைத்துவரும் இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் சேவை புனிதமானது. அதற்கு மக்கள் சகல கோணங்களிலிருந்தும் உதவி நல்கவேண்டியது அவசியம்”

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் சாவகச்சேரிக் கிளையின் வருடாந்தபொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே ஜீ ஆசீர்வாதம் கூறினார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் வழக்கறிஞர் திரு வி பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாஜிஸ்திரேட் திரு ஆசீர்வாதம் தொடர்ந்துபேசுகையில், எந்த ஒரு பொதுச் சங்கங்களிலும் காரசாரமான விவாதங்களும் உரையாடல்

(6-ம் பக்கம் பார்க்க)

# உடல், உள வளர்ச்சி பற்றி ஜனாதிபதி கிரி

சென்னை, செப். 13

சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவருடைய உடல் உளவளர்ச்சிகளையும் நவீன விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்றமுறையில் அவர்தம் வாழ்வுக்கு உதவிபுரிய வேண்டும்.

இவ்வாறு சென்னை மனநோய் மருத்துவ நிலைய ஆண்டுவிழாவில் ஜனாதிபதி வி. வி. கிரி கூறினார்.

இவ்விழாவில் அவர்மேலும் பேசுகையில் மனநோயாளர்கள் பற்றிநாம் தெளிவான ஆராய்ச்சி செய்து அதனைத்தக்க வகையில் பயன்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதினால் சமூகம் நலன் பெறுவதோடு நாடும் சுபீட்சமடையும். வெறும் கண்மூடித்தனமாக மேல்நாட்டு நாகரீகங்களையும் கொள்கைகளையும் பின்பற்றக் கூடாது என்று சொன்னார்.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு கவர்னர் திரு. கே. கே. ஷா தலைமை வகித்துப் பேசுகையில், மனநோயாளர்களின் உளப்பண்பு அறிந்து அதற்கேற்றமுறையில் அவர்களுக்கு உதவியும் சேவையும் புரிய சமூக ஸ்தாபனங்களும் சேவைநலஸ்தாபனங்களும் முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

## கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், திங்கள்

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான நவக்கிரகசம்புரோக்ஷண கும்பாபிஷேகம் இம்மாதம் 15ம் திகதி நிகழவிருக்கிறது.

மேற்படி ஆலய நவக்கிரக மூர்த்திகளுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திர மண்டபத்தில் நிகழும் இக் கும்பாபிஷேகத்தை ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் நடாத்திவைப்பார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பியின் கதாப்பிரசங்கம் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவு, பண்ணிசை செல்வர் பி ஏ எஸ் இராஜசேகரனின் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி முதலியன இடம்பெறும்.

## மலர் வெளியீடு

வெள்ளவத்தை, திங்கள்

அஞ்சல்எழுதுவினைஞர் சங்கத்தின் பத்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டமும் ‘அஞ்சல் ஒலி பத்தாவதாண்டு மலர் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் அக்டோபர் 4ம் திகதி கொழும்பு வை எம் பி ஏ மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

—

யாழ்ப்பாணம் செவ்

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க காங்கேசன்துறை கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மாலை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

---

அனலைதீவு ஐயனார்

# அன்னதான மடம் நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செவ்.

அனலைதீவு ஐயனார் கோவிலில் பலஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அன்னதான மடத் திறப்புவிழா நாளைக்காலை நடைபெறவிருக்கிறது. தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பொ. நடராசா மடத்தைத்திறந்து வைப்பார். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் ஆசியுரை வழங்குவார். பகல் மகேசுவரபூசை நிகழும்.

இரவு நிகழ்ச்சிகள் தீவுப் பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் வித்துவான் ப. கணபதி, யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) செஞ்சொற் செம்மணி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. கே. பி. ஹரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய மாணவிகளினதும், தோப்புக்காடு கலை கலாசார மன்றத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் அளவெட்டி வி. மு. ஐயாத்துரை குழுவினரின் வில்லுப்பாட்டும் ‘திருநாளைப் போவார்’ என்ற நாடகமும் இடம்பெறும்.

## தமிழர்கள்....,

(1ம்பக்கத் தொடர்ச்சி)

வங்கி கடிதங்களை அனுப்பி வருகின்றது.

கடிதங்களுக்குப் பதில் அளிக்காவிடில் உத்தியோக மொழியாகிய சிங்களத்திலேயே தொடர்புகள் வைக்கப்படுமெனவும் அக்கடிதத்தில் பயமுறுத்தப்பட்டுள்ளது.

வங்கி அலுவல்களில் சிங்களத்தைத் திணிக்கும் முதல் முயற்சியாக இது அமைந்துள்ளது.

தமிழர்கள் தாம் தமிழிலேயே தொடர்புகளை வைத்திருக்கப் போவதாக வங்கிக்குக் குறித்த திகதிக்கு முன் எழுதுவதன் மூலம் வங்கியிலே தமிழில் கருமமாற்றுதற்குத் தமிழ் உத்தியோகத்தர்களும் தமிழ் தட்டெழுத்தாளர்களும் புதியதாக நியமிக்கப்படுதற்கான வாய்ப்பை ஏற்படுத்தமுடியும்.”

## பிரயாணிகள் கஷ்டம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பஸ் பிரயாணிகள் தினமும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள். உரிய நேரத்துக்கு பஸ்வண்டிகள் ஒழுங்காகச் செல்வதில்லை. காலை 10-30 மணிக்கு பின்னர் பகல் 12 30 மணிவரையும் சுழிபுரம் வீதியால் யாழ்ப்பாணத்திற்கு இ. போ. ச. பஸ்வண்டி எதுவும், செல்வதில்லை. இதனால் மிகவும் அத்தியாவசியமான உணவு போன்றவற்றை யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்பவர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதுபற்றி உடன்விசாரணை செய்து பொதுமக்கள் நன்மையடைய நடவடிக்கை எடுக்குமாறு சுழிபுரம் கிராம சபை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் யாழ்ப்பாண இ. போ. ச. முகாமையாளரை வேண்டியுள்ளனர்.

---

# குருஷேவ் பூதவுடல் ஆடம்பரமின்றி அடக்கம்

மாஸ்கோ, செப். 13

காலஞ்சென்ற முன்னாள் ரஷ்யப் பிரதமர் திரு. குருஷேவின் பூதவுடல் இன்று ஆடம்பரமற்ற முறையில் அடக்கஞ் செய்யப்பட்டது. தனிப்பட்ட முறையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

சோவியத் அரசாங்கம் குருஷேவின் மறைவு பற்றி இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அரசாங்கம் வெளியிட்டுள்ள சுருக்கமான அறிக்கையில் நீண்டநாள் நோய்வாய்ப்பட்டிருந்த குருஷேவ் நேற்று முன்தினம் மரணமாகிவிட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

---

‘ஊசிவழி நூல் செல்வதுபோல்

# இறைவழி உயிர் செல்ல வேண்டும்’

யாழ்ப்பாணம், செவ்

“கிழிந்தஆடையைத் தைக்கும்போது, நூல்தான் ஆடையைப் பொருத்துகிறது அதனால் நூல் தனிய ஆடையைப் பொருத்திவிட முடியுமா? முடியாது ஊசிவேண்டும் ஊசிபோகிறவழி நூல் சென்றால்தான் ஆடையின் கிழிவு பொருந்தப்படும். எனவே நூலாகிய ஆன்மாக்கள், ஊசியாகிய இறைவன் திருவழி பின்செல்லவேண்டும்”

இவ்வாறு நேற்றுமாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற செஞ்சொற்செல்வர் திரு கி வா ஜகந்நாதனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் திரு கி வா ஜ பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் பெயரைச் சொல்லி ‘நடராசா’ இறந்துவிட்டார் என்கிறோம் என்னுடைய உடம்பு இறந்துவிட்டது

(6-ம் பக்கம் பார்க்க)

# ‘இசை நூல் தமிழ் உலகுக்கு மிகவும் அவசியம்’

அரியாலை, ஞாயிறு

“ஏழிசையாய் இசைப்பயனாய்” என்று எம்பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார் சுந்தரமூர்த்திசுவாமிகள். “நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” என்று திருஞானசம்பந்தசுவாமிகள் புகழப்படுகிறார். அவர் ‘கானத்தின் எழுபிறப்பு’ என்று சேக்கிழார் போற்றுகின்ற அளவிற்கு இசைவல்லவராய் விளங்கினார். பொழுதறிந்து அதற்கேற்பப் பண்ணறிந்து பதிகங்கள் பாடியவர் அவர். திருவாலவாய்க்கு அவர் எழுந்தருளியபோது காலைப் பொழுதாதலின் அவ்வேளைக்குப் பொருத்தமான புறநீர்மைப் பண்ணில் தமிழிசையால் பதிகம் பாடியமை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு இசைவல்லார் சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமியும் நல்லை முருகன் மீது நல்ல கீர்த்தனைகளை ஆக்கி இசையமைத்து நூல் வடிவில் தந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.”

மேற்கண்டவாறு ‘நல்லைக் கந்தன் தமிழிசைப்பாடல்கள்’ நூல் வெளியீட்டுவிழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றபோது தலைமையுரையாற்றிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் குறிப்பிட்டார்.

இறைவனை இசையால் பாடுவதே பிறவியின் பயன். இந்த இசை நூல் தமிழ் உலகத்திற்கு மிக வேண்டியதாகும் என்றும் சுவாமிகள் சொன்னார்.

ஆசியுரை வழங்கிய ‘சொக்கன்’ தமது உரையில் குறிப்பிட்டதாவது:

“சாகித்திய கர்த்தாக்களே சங்கீதவித்துவான்களாகவும் விளங்குவது மிக அபூர்வமானதாகும். இசையரசு தண்டபாணி தேசிகர் பாபநாசம் சிவன் போன்ற மிகச்சிலரே இவ்விரு ஆற்றல்களும் ஒருங்கு சேரப் பெற்று விளங்கினார்கள். அவர்கள் வரிசையில் எமது யாழ்ப்பாணத்தில் சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமி சர்மா விளங்குவது எமக்குப் பெருமையாகும்

## மலையக இலக்கிய விழா

வெள்ளவத்தை, திங்

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கலாசாரப் பிரிவினர் இம்மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தில் ‘மலையக இலக்கிய விழா’வொன்றை நடாத்தவுள்ளனர். மலையக எழுத்தாளர்கள், கவிஞர்களின் சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ்விழாவில் யாழ்ப்பாணத்திலிருந்தும் திரு. டொமினிக் ஜீவா, கலாநிதி திரு. கா. சிவத்தம்பி ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இன்னும் கொழும்பிலிருந்தும் பல இலக்கிய அன்பர்கள் இவ்விழாவிற்குச் செல்லவிருக்கின்றனர்.

## வேலையற்ற 4000 பேருக்கு உழவு இயந்திரம்

கோட்டை, திங்கள்

வேலையற்றிருக்கும் 4000 இளைஞர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட உழவுயந்திரங்களை அரசாங்கம் கடனாக வழங்கவிருக்கிறது. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களுக்கு இது கிடைக்கும்.

உழவுயந்திரங்களைக் கடனாகக் கொடுப்பதன் மூலம், 1 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலத்தில் மேலதிக விவசாயம் செய்ய முடியும் என விவசாய அமைச்சு கருதுகிறது. அத்துடன் உழவுயந்திரங்களைப் பழுதுபார்ப்பவர்களுக்கும் அதிக வேலைவாய்ப்புக் கிடைக்கவும் இது வாய்ப்பளிக்கும் என்று அமைச்சு கருதுகிறது.

### மணிவாக்கு

இறைவன் படைப்புகள் அனைத்திலும் உண்மையைக் காண்பதே உலரிய தன்மையாகும்.
— சரோஜினிநாயுடு.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருடம் ஆவணி மாதம் 29-ந் திகதி (14-9-71)


## தப்பெண்ணங்கள் நீக்கம்

இந்திய - சோவியத் நட்பு ஒப்பந்தம்பற்றி இங்கு சில வட்டாரங்களில் நிலவிய சந்தேகங்களையும், தப்பெண்ணங்களையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுவரண்சிங் வெகுவாக நீக்கியுள்ளார். அவரது இலங்கை விஜயத்தில் நல்ல பலன்களில் இதுவுமொன்று.

சோவியத்துடன் தாங்கள் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் சமாதான, நட்பு ஒப்பந்தமேயன்றி, இராணுவக்கட்டு ஒப்பந்தமல்லவென்றும், புதுசீனத்துடனும் இவ்வித ஒப்பந்தம் செய்துகொள்ளத் தாங்கள் தயாரென்றும் அவர் விளக்கினார். அதுமட்டுமல்ல புதுசீனத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் செல்லுவது நல்லதென்றும், நல்லுறவுகளை அது ஏற்படுத்துமென்றும் அவர் கூறினார். இதிலிருந்து இந்தியா எவ்வித இராணுவக்கட்டிலும் சேரவில்லை என்பது தெளிவாகிறது. இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியும் அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்லுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய ஹைகமிஷனில் அமைச்சர் சுவரண்சிங்குக்கு அளித்த விருந்துபசாரத்துக்கு கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. சோவியத்துடன் இந்தியா செய்துகொண்ட ஒப்பந்தம் விஷயமாக சீனத்துக்கு ஏதும் மனஸ்தாபமிருப்பின், அவர் அந்த விருந்துக்கு வந்திருக்கமாட்டார். சீனத்துக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவுகளைப் பலப்படுத்த இலங்கையின் உதவி தேவையில்லை என்றும் புதுடில்லியில் சீன ஸ்தானிகரும், பீகிங்கில் இந்திய ஸ்தானிகரும் இருப்பதால் தாங்கள் நேரிலேயே பேசிக்கொள்ள வாய்ப்புண்டென்றும் இந்திய - சீன உறவுகள் இவ்வொப்பந்தம் காரணமாக மோசமாவதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை என்றும் அவர் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறினார்.

ரஷ்யாவுக்கும் சீனத்துக்கும் விரோதமென்று சொல்வது அவ்வளவு சரியல்லவென்றும், இருநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இப்போதும் பேச்சுகள் நடந்து சில ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகின்றன என்றும் அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. சீனத்துக்கும் ரஷ்யாவுக்கும் பிணக்குகளை ஏற்படுத்தி இரண்டையும் மோதவிட சில சக்திகள் முயலக்கூடும். ஆனால் அவ்விதம் மோதல் ஏற்படுமாயின், அவ்விரு நாடுகளுக்கும் எவ்வளவு பாதகம் ஏற்படுமென்பதை அவை உணர்ந்து தங்களிடையே ஏற்பட்டுள்ள மனஸ்தாபங்களையும் எல்லைத்தகராறு முதலியவற்றையும் நேர்முகமான பேச்சுகள் மூலம் தீர்த்துக்கொள்ள எல்லா முயற்சிகளும் செய்யுமாயின் அதில் வியப்பில்லை. இதேபோல் இந்தியாவும் சீனமும் தங்கள் எல்லைத்தகராறுகளை நேர்முகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள எவ்விதத் தடையுமில்லை.

கிழக்கு வங்காளப் பிரச்னை பாகிஸ்தானின் உள்நாட்டு விஷயமென்று இலங்கை அரசாங்கக் கோஷ்டி இப்பொழுதும் கருதுகிறது. ஆனால் சமீபகாலம் வரை அது பாகிஸ்தானின் உள்நாட்டுவிஷயமாகவே இருந்ததென்றும், பல லட்சக்கணக்கான மக்கள் தங்கள் நாட்டை விட்டு வேறு நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்ததிலிருந்து இது ஒரு சர்வதேசப் பிரச்னையாகிவிட்டதென்றும் இந்திய அமைச்சர் கருத்துத் தெரிவித்தார். இதில் சிறிது வேற்றுமை இருந்தாலும், இப்பிரச்னையை மனிதாபிமானத்தை முன்விட்டு அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை இலங்கையும் கூட்டறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறது. நாள் ஒன்றுக்கு 80 லட்சம் பாகிஸ்தான் அகதிகளுக்காக இந்தியா இரண்டரைக்கோடி ரூபாய் செலவழிக்கிறதாம்! இது தாங்க முடியாத ஒரு பளு. சம்பந்தப்பட்ட அகதிகளுக்கும் எவ்வளவு சங்கடம் என்பதை விளக்கத் தேவையில்லை. இவ்விஷயமாக பொது நட்புநாடான இலங்கை, தன் நல்லோசனைகளைக் கூறி, அந்த அகதிகள் மீண்டும் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பி நிம்மதியாக வசிக்கக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்த இலங்கை தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்ய இனி முயலவேண்டும். இந்திய அமைச்சரின் இந்த விஜயம் இலங்கையின் இக்கடமையை அறிவுறுத்தப் பெரிதும் உதவியுள்ளது.

## காதல் கைகூடாததால் இளைஞர் உயிரை மாய்த்தார்!

வல்வெட்டித்துறை, திங். உயிருக்குயிராகக் காதலித்தார். ஆனால் அந்த இளம்பெண் அவரின் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அறிந்தபோது, அந்த இளைஞருக்கு உலகமே வெறுத்துவிட்டது. கிருமிநாசினியிடம் தஞ்சம் புகுந்தார். வாழ்வை முடித்துக்கொண்டார்.

இத்தப்பரிதாப சம்பவம் துன்னாலை தெற்கில் நடந்தது. காதலுக்காகத் தன் உயிரை மாய்த்துக்கொண்டவர், இருபத்தேழு வயது சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்ற இளைஞர்.

மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. சுந்தரலிங்கம் மரணவிசாரணை நடாத்தினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கொழும்பில் கலைமகள் விழா

வெள்ளவத்தை திங்கள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கும் கலைமகள் விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கொழும்பிலுள்ள அரசாங்க திணைக்களங்கள் பலவும் மேற்கொண்டுள்ளன. அஞ்சல் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுங்கத் திணைக்களம், கச்சேரி, துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம் ஆகியன சரஸ்வதிபூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

இந்த விழாக்களில் பல உள்ளூர்க் கலைஞர்களின் நாதஸ்வர இசை பரதநாட்டியம் கதாகாலட்சேபம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## ஆண்டு விழா

ஊரதீவு திங்கள் புங்குடுதீவு இருப்பிட்டி சனசமூகநிலையத்தின் ஆண்டுவிழா இம்மாதம் 26-ந் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவில் விளையாட்டுப்போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

## இளம்பெண் தற்கொலை

வல்வெட்டித்துறை, திங்கள் அல்வாய் தெற்கைச் சேர்ந்த சந்தையா கனகசபையின் மகள் சற்குணதேவி (வயது 20) கிருமிநாசினியை அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார். மரணவிசாரணையில் இறந்தவரின் தந்தை க. கனகசபை சாட்சியமளிக்கையில், இறந்தவர் எனது 8-வது மகளென்றும் இவர் கலியாணம் செய்யவில்லையென்றும் கூறினார். மேலும் கூறியதாவது: சம்பவதினம் தான் சட்டைச்சீலை வேண்டக் கேட்டதாகவும், தான் தற்பொழுது காசில்லை என்று கூற இறந்தவர் தன்னுடன் பேச்சுப்பட்டு வாக்குவாதப்பட்டார் என்றும் இவரை தான் ஏசியதாகவும் கூறினார். இதன் பின்னர் மனமுடைந்து கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்தாரெனவும் கூறினார்.

மரணவிசாரணை அதிகாரி திரு வி. பி. சுந்தரலிங்கம் மேலும் பல சாட்சியங்களை விசாரணை செய்தபின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## கயரோகத்தை...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

களும் இடம்பெறுவதில் அச்சங்கத்தை ஒரு உயிருள்ள சங்கம் என்று கூறமுடியாது. எனவே பொதுச் சங்கங்களில் காரசாரமான உரையாடல்களும் விவாதங்களும் இடம்பெற்று உயிரூட்ட வேண்டும்"

கயரோகத்தைப்பொறுத்தவரையில் அது சமூகத்தைச் சிறுகச்சிறுக வதைக்கும் ஒரு கொடிய நோய். அதனால் பீடிக்கப்பட்டவர்களையும் சமூகம் புறக்கணிப்பது சகஜமாகிவிட்டது. அப்படியான மக்களுக்குச் சேவைசெய்வதில் இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கம், பெரிய ஒரு புனிததன்மையடைந்துள்ளது என்றார்.

இதையடுத்து வைத்திய கலாநிதி டாக்டர் ரி வாமதேவன் தென்மராட்சிக் காரியாதிகாரி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவரது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'மரண பயத்தை நீக்க இறைவன் துணையை நாடுவோம்'

—கி. வா. ஜ

தாவடி, திங்கள் "மரணபயம் என்பதொன்று வரும் என்பதை யாராவது சிந்திக்கின்றீர்களா? மரணம் என்ற பொருள் உண்டு. அது எம்மை நாடி வருவது உண்மை. ஆனால் எந்தெந்த நேரத்தில் என்று யாராலும் கூறமுடியாது. மரண பயத்தைப் பற்றிச் சிந்தித்தால் இறை சிந்தைவரும். நாளும் நன்மைகள் பல செய்து தன் மூச்சிலும் பேச்சிலும் கனவிலும் நினைவிலும் இறைவனுடைய சிந்தனையுடன் வாழ்கின்றவர்களுக்குத்தான் துன்பம் அதிகம். ஆனால் தினந்தோறும் தீமைபுரிந்து வாழ்பவன் இன்பமாக வாழ்கின்றானே என்று கூறுவர். அது எப்படியென்றால் தூய வெண்மை நிறம்வாய்ந்த மேலாடை பொன்றில் கண்ணே ஒரு அழுக்குப் பிடித்துவிடின் உடனே நீரினாலே கழுவிச் சுத்தப்படுத்துகின்றோம். நிறைந்த அழுக்குடைய ஆடையை மேலும் அழுகசேறிய பின்னர்தான் சலவைக்குக் கொடுக்கின்றோம். எனவே நன்மை செய்பவன் எவ்வளவேனும் தீமை செய்யாது வாழவும், தீமையையே செய்பவன் எதிர்காலத்திலே பெருந்துன்பத்தையும் அடையவும் ஏதுவாகும். நமக்கு மூவர் துணையாவார்கள். அவர்கள் யார்? தன்னிலும் குறைந்தவன், தனக்குச் சமமானவன், தன்னின் உயர்ந்தோன். இம்மூவரிலும் உயர்ந்தோன் என்றுந்துணையாக இருப்பவன் இம் மூவருக்கும் மேலாகி ஆதியந்தமற்ற அருட்பெருஞ்ஜோதியாய் நிறைந்துள்ள இறைவனுவன். மரண பயத்தை நீக்க இறைவன் துணையை வேண்டுவோமாக"

மேற்கண்டவாறு தமிழகத்துப் பெரியார் திரு. கி. வா. ஜகந்நாதன், இணுவில் அம்பலவாணர் கந்தசுவாமி ஆலயத்தில் ஆற்றிய சொற்பொழிவின்போது கூறினார்.

வைத்திய கலாநிதி திரு. க. சிவஞானரத்தினத்தின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாகிய இவ்வைபவத்துக்கு ஆசிரியர் திரு. க. கதிரவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து பேசிய திரு. கி. வா. ஜகந்நாதன் குறிப்பிட்டதாவது:

"திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், அருணகிரியார் ஆகியோர் சிவச்செல்வர்கள் கூறிய பாதையில் சென்றால் வாதை நம்மை வந்தடையமாட்டாது. இன்பம் கைகூடும். துன்பம் பறந்தோடிவிடும்.

நாம் உறங்குகின்றோம். அப்போது மூச்சுவிடுகின்றோம். அம் மூச்சிலும் இறைவன் நாமத்தை உச்சரிக்க வேண்டும். கண்ணினால் ஒரு பொருளைக் கண்டால்தான் கருத்தில் அதை இருத்திச் சிந்திக்க முடிகிறது. எனவே தான் இறைவனை வடிவமாக நினைத்து வணங்குகிறோம். வடிவமாக வழிபாடு செய்வதற்குத்தான் ஆலயத்திற்கு வருகின்றோம். நாமத்தைப்பாடி வழிபட வேண்டுமானால் எங்கேனும் எக்கணமும் நாமத்தைச்சொல்லி வழிபாடுசெய்யலாம்."

## இறைவழி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்கிறோமா இல் நான் என உரிமை பாராட்டுகிறோம். அவரது உடம்பிலே உள்ள சட்டை கிழிந்துவிட்டால் எனது சட்டை கிழிந்துவிட்டது என்பாரேதவிர 'நான் கிழிந்துவிட்டேன்' என்றால் எல்லோரும் பைத்தியம் என்பார்கள். இந்தச் சட்டைக்கும் உடம்புக்கும் உள்ள வேற்றுமை எமக்குத் தெரிகிறது. ஆனால் அதற்கு அடுத்ததாக உள்ள உடம்புச்சட்டை கிழிந்துவிட்டால் அது எமக்குச் சொந்தமில்லை என நினைக்கிறோமில்லை முத்தியதற்குள்ள விளக்கம் தெரிகிறது. மற்றையதற்குரிய பக்குவநிலை எமக்குப் புலனாகவில்லை: அதனால் இத்தவறைச் செய்கிறோம்

## பயமுறுத்திப் பணத்தை பறித்தனராம்

யாழ்ப்பாணம், செவ் இளைப்பாறிய ஆசிரியர் ஒருவரைமிரட்டி சிலர் வழிப்பறி செய்தார்களாம். பரந்தனில் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைப்பாறிய ஆசிரியர் பரந்தன் 7ம் வாய்க்காலில் உள்ள தமது காணிக்குப் போய்க்கொண்டிருந்தபோது புகையிரதநிலையத்திற்கு அண்மையாக பூதகரிப்பாதையில் காக்சட்டை அணிந்த இனந்தெரியாத சிலர் அவரை வழிமறித்துப் பயமுறுத்தி அவரிடமிருந்து 100 ரூபாவைக் கொள்ளையடித்தனராம்.

கிளிநொச்சிப் பொலிசார் இதுபற்றிப் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## ராட்சதஊரி

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணக்குடா நாட்டில் இராட்சத ஊரியொன்று கண்டெடுக்கப்பட்டு யாழ். நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சுமார் முக்கால் அடி உயரமும் 5 றாத்தலுக்கு மேற்பட்ட எடையுமுள்ள இவ்வூரி கிட்டத்தட்ட 20 ஆயிரம் வருடங்களுக்கு மேலான பழமை மிக்கதாயிருக்கலாமென நூதனசாலை அதிகாரி தெரிவித்தார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளவிலுள்ள கற்பாறையிடையே சுமார் 10 அடி ஆழத்தில் இது கண்டு எடுக்கப்பட்டதாம். (கு. வி. ம.)

## பழைய பூங்காவில் பாசறை விழா

யாழ்ப்பாணம் செவ்வாய் இம்மாதம் 18-ம் திகதி மாலை யாழ்ப்பாணம்பழைய பூங்காவில் யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தினரால் நடாத்தப்படும் பாசறை விழாக் காட்சிகள் இடம்பெறவுள்ளன. இதன்போது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் எனத் தெரிகிறது.

## பாரதிவிழா

கொட்டாஞ்சேனை, திங்கள் மறைந்தபெரியார்களுக்கு விழாவெடுத்துக் கௌரவிப்பதால் அவர்களைப் பின்பற்றி நாம் வாழ்வில் முன்னேறமுடியும். பாரதிக்கு விழா எடுக்கும் நாம் பாரதி கூறியவற்றை மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். பாரதியின் நூல்களைப்பிரசுரித்து வெளியிட வேண்டும்'

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற பாரதிவிழாவில் தலைமையுரை நிகழ்த்திய கி. லக்ஷ்மணன் மேற்கண்டவாறு கூறினார்.